DEPOSITION OF THE WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE,
NANNILAM.

**CC. No.4/2019**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Deposition of witness for | : | PW4 (LW 3) | Caste | : | |
| Name | : | கார்த்திகேயன் | Age | : | 44 |
| Father's Name | : | செல்வராஜ் | Occupation | : | திருப்பூர் பனியன் கம்பெனி |
| Village | : | கூத்தனூர் | Taluk | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the 07th day of February 2023.

07.02.2023

**(Accused absent, Petition U/s. 317 Crpc filed and allowed).**

**முதல் விசாரணை** :

நான் தற்சமயம் கூத்தனூரில் குடியிருந்து திருப்பூர் பனியன் கம்பெனியில் வேலை செய்து வருகிறேன். விபத்தில் இறந்துபோன வேலன் என்பவர் எனக்கு அண்ணன் முறை ஆவார். சுமார் 5 வருடங்களுக்கு முன்பு ஒரு நாள் மதியம் 03.00 மணி முதல் 03.30 மணியளவில் டீ வாங்குவதற்காக கூத்தனூரிலிருந்து புறப்பட்டு கொல்லுமாங்குடிக்கு இருசக்கர வாகனத்தில் சென்றார். மயிலாடுதுறையிலிருந்து திருவாரூர் நோக்கி வந்த தனியார் tourist பேருந்து கொல்லுமாங்குடி இந்தியன் வங்கி அருகே இருசக்கர வாகனத்தில் வேலன் என்பவர் கொல்லுமாங்குடி கடைத்தெருவில் வடக்கு நோக்கி சென்றபோது மேற்படி பேருந்து வேலன் என்பவர் மீது மோதியது. அதில் அவர் சம்பவ இடத்திலேயே இறந்துவிட்டார். அவருக்கு தலை, கை ஆகிய இடங்களில் பலத்த காயம் ஏற்பட்டிருந்தது. அவரது பிரேதத்தை உடனடியாக திருவாரூர் அரசு மருத்துவமனைக்கு ஆம்புலன்ஸ் மூலமாக கொண்டு சென்றோம். வேலன் என்பவரது உடலின் மீது பேரளம்

போலீசார் திருவாரூர் அரசு மருத்துவமனையில் வந்து விசாரித்தார்கள். நானும் உடனிருந்தேன். பேருந்தை இயக்கிய நபரை பார்த்தால் அடையாளம் தெரியும்.

**முதல் விசாரணை தொடர்ச்சிக்காக ஒத்தி வைக்கப்படுகிறது.**

(ஒம்/- S. விஜய் ஆனந்த்)
மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை
நடுவர் (மு.கூ.பொ.), நன்னிலம்.